# புதிய இதயம்

திங்கள் இதழ்

'CREATING NEW HEARTS TO RISE AND SHINE'

மலர் - 2 இதழ் - 5 | எழு...ஒளிவீசு... எசாயா 60:1 | மே 2023


# உழைப்பு உயர்வு



# புதிய இதயம்
திங்கள் இதழ்



## EDITOR AND PUBLISHER

**Rev. Fr. Dr. Aron**

## EDITORIAL BOARD

1. Rev. Fr. Dr. Saminathan
2. Prof. Sathish Kumaran
3. Dr. N. Murugeshwari
4. Dr. Jose Suganya
5. S. Rajesh Jasmine
6. A. Albert Linda
7. Rozario Lavaniyan
8. Kalpana I.A.S.,
9. Dr. V. Maria Jeya Jothi
10. Raymond Jennifer
11. Jennifer Dominic
12. Justin Jesudoss

**CREATIVE AND DESIGN :**

J. Savari George



## ADDRESS

**Puthiya Idhayam Magazine, Sarugani, Devakottai (Taluk), Sivagangai (Dist.) Tamil Nadu - 630 411.**

**Ph: +91 94867 45500, +91 88078 78867.**

**Email: newheartmag@gmail.com**



PRIVATE CIRCULATION ONLY


# BOOK RELEASE








**BOOK ' ONLY JESUS' RELEASED BY MOST REV. SEBASTIAN FRANCIS D.D BISHOP OF PENANG- MALAYSIA**



ஆசிரியரிடமிருந்து....

# இதய அன்பர்களே...

உலக தொழிலாளர்களே ஒன்றுகூடுங்கள்' என்ற கார்ல் மார்க்சின் அறைகூவல், தொழில்மயமாக்கலின் விளைவால் காலங்காலமாக உரிமைகள் மறுக்கப்பட்டு ஒடுக்குதலுக்கு உள்ளான தொழிலாளர் வர்க்கத்தில் மாபெரும் விழிப்புணர்வை ஏற்படுத்தியது. நாளொன்றுக்கு 18 மணிநேரம் வேலை என்ற நிலையில் கொதித்தெழுந்த தொழிலாளர்கள் 1806 ஆண்டு அமெரிக்கா, ஆஸ்திரேலியாவில் 10 மணி நேரம் வேலை வேண்டி எழுப்பிய உரிமைக்குரல் ஆதிக்க, அதிகார வர்க்கத்தால் அடக்கப்பட்டது. மீண்டும் 30 ஆண்டுகளுக்கு பிறகு தொழிலாளர்களின் உரிமை முழக்கம் முதல் தர நாடுகளை அசைத்தது. அதன் விளைவாக 10 மணி நேரம் வேளை என்ற சட்டம் இயற்றப்பட்டது. இதயத்தில் உரிமை மறுப்பின் நெருப்பு தொழிலாளர்களிடையே எரிந்து கொண்டிருந்த வேளையில் 1886 மே 1 ஆம் நாள் 8 மணி நேர வேலை, 8 மணி நேர பொழுதுபோக்கு, 8 மணி நேர ஓய்வை முன்நிறுத்தி அமெரிக்கா முழுவதும் தொழிலாளர்கள் இணைந்து வீதிக்கு வந்து மாபெரும் போராட்டத்தை முன்னெடுத்தனர். தொழிலாளர்களின் தீவிர போராட்டத்திற்கு 1890 ஆண்டு அமெரிக்க அரசு பணிந்து 8 மணி நேரம் வேலை என்ற சட்டத்தை இயற்றியது, அதனை தொடர்ந்து அமெரிக்க தொழிலாளர் கூட்டமைப்பு என்ற பெயரில் உலகில் முதல் தொழிலாளர் இயக்கம் உருவானது.

இந்தியாவில் மே தினம் முன்முதலாக தமிழகத்தில் தான் கொண்டாடப்பட்டது. இந்தியாவின் முதல் தொழிற்சங்கவாதியான சிங்காரவேலர், 1923ம் ஆண்டு சென்னையில் மே தின கொண்டாட்டத்தை நடத்தி புரட்சி செய்ததால் மே தினத்தை விடுமுறை நாளாக அரசு அறிவித்தது. முதன் முறையாக எட்டு மணி நேர உழைப்பு நேரத்தை 1942 ஆம் ஆண்டு இந்தியாவில் அறிமுகப்படுத்தியது டாக்டர் அம்பேத்கார். இதன் தொடர்ச்சியாக தொழிலாளர்களுக்கான ஊதிய நிர்ணயம், அடிப்படை ஊதிய உயர்வு, தொழிலாளர் காப்பு நிதி, தொழிலாளர் கூட்டமைப்பு, தொழிலாளர்களுக்கான விடுமுறை, பெண்தொழிலாளர்களுக்கான பேறு-கால விடுமுறை, அலுவலகங்கள் மற்றும் தொழிலகங்களில் உரிமைகள் மறுக்கப்பட்டால் போராடும் உரிமையை சட்டமாக்கி செயல்படுத்த தூண்டியதும் அண்ணல் அம்பேத்கார்.

தொழிலாளர்கள் வருடத்தில் ஒரு நாள் மட்டும் நினைத்து

பாராட்டப்பட வேண்டியவர்கள் அல்ல, ஒவ்வொரு நாளும் நினைத்து போற்றப்பட வேண்டியவர்கள். இந்நாள் உலக முழுவதும் எத்தனையோ இன்னல்களுக்கு ஆளான தொழிலாளர்களின் வலிக்கு, வேதனைக்கு மருந்து போட்டு தேற்றிடும் நன்னாள். உலகம் உழைப்பவர்களாலேயே வாழ்கிறது அதனால் அது உழைப்பவர்களுக்கே சொந்தம். தங்களின் கடின உழைப்பால் நாட்டையும் வீட்டையும் உயர்த்திடும் தொழிலாளர்களின் நலன் காக்கப்பட வேண்டும். தொழிலாளர் தினம் சராசரி மனிதனும் பொருளாதார சுதந்திரத்தை அடைய வேண்டும் என்பதை சுட்டிக் காண்பிக்கிறது. தங்கள் நலன், குடும்ப நலன், தங்கள் பாதுகாப்பு, தங்கள் வாழ்வாதாரம் இவற்றை நோக்காது சமூக நலன், நாட்டு நலன், பிறர் பாதுகாப்பு என்று தங்களையே அர்ப்பணிக்கும் தொழிலாளர்களின் உரிமையை உறுதி செய்யும் நாள்.

இந்திய அரசியலமைப்பு சட்டம் 43A தொழிலாளர்களின் வாழ்க்கை, ஊதியம், நிலையான வேலைவாய்ப்பு மற்றும் கௌரவமான வாழ்க்கைத் தரத்தை பற்றி கூறுகிறது. சர்வதேச மே தினம் உலக தொழிலாளர்களின் உரிமைக்காக பேசும் நாள். 'எந்த வேலையும் அற்பமானதல்ல, மனிதகுலத்தை உயர்த்தும் அனைத்து உழைப்பிற்கும் கண்ணியம் உண்டு; அவற்றில் வியர்வை சிந்தும் தொழிலாளர்கள் மாண்புடன் நடத்தப்படல் வேண்டும்' – மார்டின் லூத்தர் கிங். தொழிலாளர்களின் வேலை நேரம் படிப்படியாக மாறி முன்னேற்றப் பாதையில் சென்றாலும், வேலை நேரத்தில் தொழிலாளர்கள், பெண்கள், சிறுவர்கள் மனிதநேயமின்றி நடத்தப்படுவதும், மிருகங்கள் வதைக்கப்படுவதுபோல சித்ரவதைகளுக்கு உட்படுவதும், குறிப்பாக, ஆண் தொழிலாளர்கள் மதிப்பின்றி நடத்தப்படுவதும், பெண் தொழிலாளர்கள் பாலியல் சீண்டலுக்கு உட்படுவதும், குழந்தைத் தொழிலாளர்களை திட்டமிட்டு வேலையில் அமர்த்தி கொடுமைப்படுத்தபடுவதும், கடைநிலை வேலையில் உள்ளவர்களை கட்டாயப்படுத்தி கீழ்த்தரமான வேலைகளை செய்ய பணிப்பதும் இன்றும் தொடர்ந்து கொண்டு தான் இருக்கிறது. இதற்கான விடியலும் இவர்களுக்கான உரிமை வாழ்வையும் வென்றுறெடுக்க வேண்டியது காலத்தின் கட்டாயமாக இருக்கிறது.

அமெரிக்காவிலும், ஆஸ்திரேலியாவிலும் தொடங்கிய தொழிலாளர்களின் புரட்சி உலகம் முழுவதற்கும் பரவியதற்கு பின் இருக்கும் ஒரே அர்த்தம் உலகம் முழுவதும் தொழிலாளிகள் சுரண்டப்படுகிறார்கள், தொழிலாளிகள் மாண்புடன் நடத்தப்படுவதில் குறை இருக்கிறது என்பதும், தொழிலாளிகளை ஒடுக்கும் முதலாளிகள் உலகளவில் கைகோர்த்திருக்கிறார்கள் என்பதும் தெளிவு. 1938 ஆண்டு நாசிக்கில் நடந்த ஒடுக்கப்பட்ட தொழிலாளர்கள் மாநாட்டில் அண்ணல் அம்பேத்கார், "தொழிலாளர்களே ஒன்று சேருங்கள்; உங்களை பிரித்தாளும் சாதியத்தையும் மதத்தையும் ஒழிக்க எழுங்கள்; தொழிலாளர்களுக்கு இரண்டு எதிரிகள் பார்ப்பனியம், முதலாளித்துவம்" என்று முழங்கினார். ஆம் சமூக நீதி, சமத்துவம், சகோதரத்துவம் இவற்றை மறுக்கும் எவரும் பார்ப்பனிய சிந்தனை கொண்டவர்கள், இவற்றை எந்நிலையிலும் எதிர்க்க வேண்டும், அடியோடு ஒழிக்க வேண்டும்.

பிற உயிர்களை போலல்லாமல் மனிதர்களாகிய நாம் இவ்வுலகில் வாழ்வதற்கு அடிப்படை காரணம் நமக்காக உழைக்கும் தொழிலாளார்கள் தான். இதுவரையில் நமக்காக ஒவ்வொரு நாளும் தன் மதிப்பு, மரியாதை, ஏன் தன் உயிரையே துச்சமாக கருதி நலன்களை செய்யும் தொழிலாளர்களுக்கு பிரதிபலன் பாராது அவர்தம் நீதியை, உரிமையை மனிதர்களாகிய நாம் வழங்கி இருக்கிறோமா என்றால் கேள்விக்குறிதான் எழும்புகிறது. உழைப்பால் உயர்த்தப்பட்ட இவ்வுலகம் உழைப்பவர்களுக்கு என்ன செய்தது என கேள்வி கேட்பதோடு நம் உழைப்பாளர்களை, தொழிலாளர்களை ஒடுக்கி வைத்திருப்பது எது? ஒடுக்குபவர்கள் யார்? என்பதை சிந்தித்து, தொழிலாளாகளின் அடிமைத்தன சங்கிலிகளை அறுத்தெரிந்து உரிமை மீட்க மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துவோம். தொழிலாளர்களிடம் சதோதரத்துவ மாண்பை வெளிப்படுத்தி அவர்தம் உரிமையை மீட்டு புதிய சமூகம் படைப்போம்!

இதய அன்பில்...

அருள்பணி. இ. ஜோசப்...

புதிய இதயம்
திங்கள் இதழ்

# உன்னத உழைப்பாளி

# புனித சூசை



தி. சந்தனமேரி ஆசிரியை, வேப்பேரி, சென்னை.

'மே' மாதம் என்றவுடனே 'புனித வளனார்' (வளரும் கதிரவன்) என வாழ்த்தப்பெறும் புனித சூசையப்பர், திருஅவையினரின் உள்ளங்களில் வலம் வருகிறார் என்றால் அதில் ஆச்சரியப்படுவதற்கென்று ஒன்றுமில்லை. ஏனெனில், 1870-ஆம் ஆண்டு திருத்தந்தை 9-ஆம் பத்திநாதர் இவரை திருஅவையின் பாதுகாவலராக அறிவித்தார். 1955-ஆம் ஆண்டு 12-ம் பத்திநாதர் இவருக்கு விழா எடுக்கும்படி திருஅவைக்கு அழைப்பு விடுத்தார். அதுவே ஆண்டுதோறும் மே தின விழா, புனித சூசையப்பரின் திருவிழா, தொழிலாளர்களின் தினம் என்று பல சொற்தொடர்களில் கொண்டாடப்பட்டு வருகிறது என்பதை அறிகிறோம். மேலும், திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களால் 2021-ம் ஆண்டு தூய வளனாரின் ஆண்டாக அறிவிக்கப்பட்டது. இதற்கும்மேலாக, 'தூய யோசேப்பு அன்னை மரியாளின் கணவர்' என்ற பெருவிழாவானது தவக்காலத்தின் சிறப்பாக மார்ச் மாதம் 19-ம் நாள் கொண்டாடப்படுகிறது.

ஏழையாய் பிறந்தார்; எளிமையாய் வாழ்ந்தார். ஆனால், புனிதர்களின் வரிசையில் ஏணியின் உச்சியில் நிற்கிறார் மரியன்னையின் அருகினில். எப்படி இது ஆயிற்று! என்று யோசித்துப் பார்க்கையில், புரிகிறது புனித யோசேப்பின் மாண்பு. திருவிவிலியத்தை திறந்து ஆய்ந்து பார்த்தாலும் இவர்

திருவாய் மலர்ந்து பேசியதாக ஒரு வார்த்தைகூட புலப்படவில்லையே!. என்ன ஆச்சரியம் பாருங்கள்! இவர் பேசவில்லை. ஆனால், தம் உன்னத உழைப்பின் பயனாக இன்றும் பேசப்படுகிறார். உண்மையும் உழைப்பும் தொழிலாளரை உயர்த்தும்; உலகம் அவரது மாண்பை உரக்கப் பேசும்.

தொழுகைக்கூடத்தில் கற்பித்துக்கொண்டிருந்த இயேசுவைக் கண்டு, 'என்னே இவருக்கு அருளப்பட்ட ஞானம், என்னே இவர் ஆற்றும் வல்லசெயல்கள்' இவருக்கு இவையெல்லாம் எங்கிருந்து வந்தன என்றெல்லாம் சொல்லி வியப்பில் ஆழ்ந்த அவரது சொந்த ஊர்மக்கள் சற்றே தங்களை சுதாகரித்துக்கொண்டு, 'அவர் தச்சர் அல்லவா! மரியாவின் மகன்தானே!' என்று சொல்லி அவரை ஏற்றுக்கொள்ளத் தயங்கினார்கள் (மாற்கு6:1-3) என்று பார்க்கிறோம். இயேசுவைத் 'தச்சர்' என்று சொன்னதினாலே இவரை வளர்த்த தந்தை யோசேப்பும் ஒரு தச்சர் என்று அறியவருகிறோம். மரியாவின் மகன்தானே! என்றுரைக்கும்போது அவரை ஈன்றெடுத்த அன்னை மரியின் எளிமையை நம்மால் உணரமுடிகிறது.

இயேசுவை வளர்த்தவரும் ஈன்றெடுத்தவரும் தாவீதின் குலத்தை சேர்ந்தவர்கள் அல்லவா! இருவரும் இணைந்து இறைச்சித்தம் நிறைவேற்றிட இறைமகன் இயேசுவை இவ்வளவாய் உருவாக்கிட உறுதுணை நின்றது இவர்கள் இருவரின் கன்னிமையின் பரிசுத்தம் அல்லவா! இறைமகன்தானே, அவரையும் அவருக்குரியது அனைத்தையும் இறைவன் பார்த்துக்கொள்வார் என்றெண்ணிவிடாமல், 'அவர் தச்சர் அல்லவா!' என்று சொல்லும்வண்ணம் தச்சுத் தொழிலைக் கற்றுத் தந்தார். 'என்னே இவர் ஞானம்!' என்று சொல்லும்வண்ணம் இறை ஆவியை நிறைவாய்ப் பெற்றிடச் செய்தார். 'ஞானம், அறிவுக்கூர்மை, அனுபவம், தொழில்திறமை அனைத்தும் அவனுக்கு உண்டாகுமாறு நான் அவனை இறை ஆவியால் நிரப்பியுள்ளேன்' என்றே வி.ப. 31:3 நமக்கு எடுத்துரைக்கிறது.

"உழைக்க மனமில்லாத எவரும் உண்ணலாகாது" (2தெச 3:10) என்கிறார் கடவுளின் உடன் உழைப்பாளியான தூய பவுல் (1கொரி 3:9). இந்த வரிசையின் ஆரம்ப நிலையை ஆரம்பித்து வைத்தவர்கள்தான் தூய சூசையும் தூய கன்னிமரியும். மீட்பின் திட்டத்திற்காகத் தங்களை முழுமையாகவே அற்பணித்தவர்களாய் மீட்பர் இயேசுவைக் கருவறை முதல் கட்டிக்காத்து கயவர்களின் கண்களுக்கு மறைத்து வைத்தனர். அன்னை மரியின் பேறுகாலத்தில் விடுதி கேட்டு எருசலேம் வீதியில் அலைந்த அனுபவம், ஏரோது மன்னனின் கண்ணிக்குத் தப்பிட இரவோடு இரவாய் எகிப்துக்கு ஓடிச்சென்ற அனுபவம், சொந்த ஊர் திரும்பிட கட்டளை பிறந்ததும் நாசரேத்துக்கு விரைந்திட்ட அனுபவம் இவை அனைத்தும் கனவின் வழியாய் வந்த இறைவனின் கட்டளைகள் தந்த உன்னத இன்ப அனுபவங்கள் அன்றோ. கனவின் வழியாகவே வழிநடத்தப்பெற்று இறைமகன் இயேசுவை வளர்த்தெடுக்க பொறுப்பேற்ற புனித யோசேப்பின் தந்தை பெயர் யாக்கோபு என்று கூறும்போது, நம் முதுபெரும் தந்தை நம் நினைவலையில் வருவது என்ன ஆச்சரியம்! நம் முதுபெரும் தந்தையின் பெயரும் யாக்கோபு அன்றோ. தம் சகோதரர்களால், 'கனவின் மன்னன்' என்று பெயர் பெற்றார் யாக்கோபின் மகன் யோசேப்பு. இதை நினைக்கும்போது உள்ளம் இனிக்குதன்றோ!

கூடிவாழும் முன்பே திருமண ஒப்பந்தம் செய்யப்பட்ட கன்னிமரியாள் கருவுற்றார் என்ற செய்தியை கேள்விப்பட்ட உடனே, எந்த பதற்றமும் அடையாமல், மரியாள் பெயர் களங்கத்திற்கு உள்ளாகிவிடக்கூடாதே என்ற கலக்கத்தில் அவரை மறைவாய் தள்ளிவிட வேண்டும் என்ற உயர் நோக்கில் திட்டமிட்ட நிலையில் தூக்கமின்றி சிந்தித்துக்கொண்டிருந்த வேளையில் கடவுளின் தூதர் வழியாய் வந்த செய்தியில் ஆறுதல் பெற்றவராய் உள்ளத்தில் அமைதியானார். நேர்மையாளர் என்பதை மெய்ப்பித்தார் புனித யோசேப்பு. இவர் திருக்குடும்பத்தின் தலைவராக இருந்து அழியாத உணவாகிய இயேசுவுக்காகவே உழைத்தார்; வாழ்ந்தார். கல்வியின், கன்னியரின், தூய மரணத்தின், உழைப்பாளரின், திருஅவையின் பாதுகாவலராய்த் திகழ்கிறார். தூய ஆவியின் கனியால் அலங்கரிக்கப்பட்டவராய் வானோர்களின் திருவிழாக் கூட்டத்தில் விண்மீனாய் ஜொலிக்கிறார்.

இறையருளால் நமக்கு அருளப்பட்ட பொறுப்புகளை உண்மையும் உத்தமமும் உடையோராய், உழைப்பின் மேன்மையை உணர்ந்தோராய், உவப்புடன் ஆற்றிட, புனித சூசையப்பரின் பரிந்துரையில் இறையருளை நாடுவோம்.

புதிய இதயம்
திங்கள் இதழ்

# சிந்தனைச் சிற்பி சிங்கார வேலரும் மேதின நுற்றாண்டும்!

கி.சதீகஷ்குமார், உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை,
கலைக்காவிரி நுண்கலைக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி~1.



**‘பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா செய்தொழில் வேற்றுமையான்’**

என்றும்

**‘முயற்சி தன் மெய்வருத்தக் கூலிதரும்’**

என்றும் நம் தமிழ்மறை மனித சமூகததின் மாண்பை மக்களுடைய செயலாற்றலின் திறத்தை மதிப்பை பறைசாற்றுகிறது.

காலந்தோறும் மானுட சமூகத்தை மநு அடிப்படையில் வரையறுக்காமல் படிநிலைகளை உடைத்து சமத்துவ சமதர்ம சகோதரத்துவ அடிப்படையில் அணுகிட குரல் கொடுத்த மரபு நம்



தமிழர் மரபு. சனாதனம் என்றும் சமூக வளர்ச்சிக்கும் மாண்புக்கும் தீமை விளைவிப்பது. வர்க்க பேதங்களை படிநிலைகளை உருவாக்கி மக்களை பல நூற்றாண்டுகள் பின்னுக்கு இழுப்பது. ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னே தமிழர் சிந்தனை மரபு அறம். ஒட்டுமொத்த உலகையும் உய்விப்பதற்கான சிந்தனை மரபைக் கொண்டது. அத்தகைய செம்மை வள சிந்தனை மரபில் வந்தவர்தாம் சிங்கார வேலர் ஆவார்.

சிங்காரவேலர் 1860ஆம் ஆண்டு பிப்ரவரி 18ஆம் நாள் பிறந்தார். இவரது குடும்பம் பிற்படுத்தப்பட்ட மீனவர் சமூகத்தைச் சார்ந்தது. இவர் இளம்வயதிலேயே கல்வியை ஆர்வமுடன் திறம்படக் கற்றார். சட்டப்படிப்பை முடித்து வழக்குரைஞராய் பணியாற்றியவர். தமிழ், ஆங்கிலம், இந்தி, உருது, பிரெஞ்சு, ஜெர்மன் ஆகிய மொழிகளிலும் பட்டறிவுப் பெற்றவர். தன் வீட்டில் 20,000 நூல்களுக்கும் மேல் சேகரித்து வைத்திருந்தார். மிகவும் வசதியான குடும்பத்தில் பிறந்து வளர்ந்திருந்தாலும் எப்போதும் அடித்தட்டு மக்கள் பற்றியும் உழைக்கும் தொழிலாளர்கள், கூலிகள் அன்றாடங்காய்ச்சிகள் குறித்தும் தீவிரமாய் சிந்தித்துக் கிடந்தார்.

## இந்தியாவின் முதல் கம்யூனிஸ்ட்:

1922இல் பம்பாயைச் சேர்ந்த எஸ்.ஏ. டாங்கேயுடன் சிங்காரவேலருக்குத் தொடர்பு ஏற்பட்டது. 1922இல் எம்.என். ராய் உருவாக்கிய திட்டத்தால் கவரப்பட்டு அவருடன் கடிதப் போக்குவரத்தில் இருந்தார்.

1923 இல் இந்தியாவில் மே தினத்தை சென்னையில் செங்கொடி ஏற்றி அறிமுகப்படுத்தினார். லேபர் கிசான் கெஜட் என்கிற ஆங்கில வார இதழையும், ‘தொழிலாளன்’ என்ற தமிழ் வார இதழையும் தொடங்கி ஆசிரியராகப் பணியாற்றினார். இந்திய கம்யூனிஸ்ட்களின் முதல் மாநாடு 1925 ஆம் ஆண்டு டிசம்பர் 28 முதல் 30 வரை கான்பூரில் சிங்காரவேலர் தலைமையில் நடைபெற்றது.

தமிழ் நிலத்திற்கென்று மிக நீண்ட நெடிய வரலாறு உண்டு. காலந்தோறும் பல முற்போக்கு சமத்துவக் கருத்துக்களின் பிறப்பிடமாக இந்த நிலம் இருந்திருக்கிறது. அதுமட்டுமின்றி உலகின் எந்த மூலையில் அறிவுப்பூர்வமான கருத்துக்கள் உருவானாலும் அவற்றை உடனடியாக உள்வாங்கி பின்பற்றுகிற நிலமாகவும் திகழ்ந்திருக்கிறது. இது தமிழர்களுக்கே உரிய தனித்துவமான மாண்பு எனில் மிகையில்லை. அத்தகைய தனித்தமாண்பு மிக்க முன்னோடி முதல் கம்யூனிஸ்ட் தான் சிங்கார வேலர். பாவேந்தர் இவரைப் பற்றி

‘போர்க்குணமிகுந்த செயல் முன்னோடி
பொதுவுடைமைக்கு ஏகுக அவர் பின்னாடி’

என்று பாடியுள்ளார்.

1917ஆம் ஆண்டு ரக்ஷ்ய மண்ணில் புரட்சி வெடிக்கிறது. கம்யூனிஸ்ட்கள் ஆட்சியைக் கைப்பற்றுகின்றனர். இவற்றை நாளிதழ்களிலும் நூல்களின் வாயிலாகவும் அறிந்து கொண்ட சிங்காரவேலரின் மனதிலும் புரட்சிகர சிந்தனை துளிர்விடத் தொடங்குகிறது. இயல்பிலேயே பொதுவுடைமை, சமத்துவம், சுயமரியாதை ஆகிய கருத்துக்களில் நாட்டம் கொண்ட சிங்காரவேலருக்கு அவற்றை விஞ்ஞான வழியில் வெளிப்படுத்தும் மார்க்சிய தத்துவத்தின் மீது ஈர்ப்பு ஏற்படுகிறது. கம்யூனிஸ்ட் இயக்கக் கருத்துக்களை இந்தியாவில் எவரும் அவருக்கு கற்பிக்கவில்லை. தன் தேடுதல் வாயிலாக கண்டடைந்த 81 சித்தாந்தம் தான் கம்யூனிசம்.

மாமேதை காரல்மார்க்ஸ், லெனின் கருத்துக்களை உள்வாங்கி இந்தியாவின் தெற்கு மூலையில் ஒரு மீனவக் கிராமத்தைச் சேர்ந்த சிங்கார வேலர் மே தினத்தை முதன்முதலில் அறிமுகம் செய்தார்.

அறிவுத்தேடலுக்கு அரசியல் தேடலும் கொண்ட செயற்பாட்டாளரான சிங்கார வேலர் தான் முன்னோடிகளில்லா முன்னோடி என்றும் சிந்தனைச் சிற்பி என்றும் போற்றப்படுகிறார்.

தான் காங்கிரஸ் கட்சியில் இருந்தாலும் கம்யூனிசக் கருத்துக்களை தான் செல்லுமிடமெங்கும் எடுத்துச் சென்றார். திரு. வி.கவால் தொடங்கப்பட்ட சென்னை தொழிலாளர் சங்கத்தில் இணைந்து பணியாற்றினார். அதுவரை வெறும் ஊதிய உயர்வுப் போராட்டங்களையும் உரிமைகளை கேட்டுப் பெறுகின்ற அமைப்பாகவும் மட்டுமே செயல்பட்டு வந்த தொழிற்சங்கத்தை வேறு ஒரு வடிவத்திற்கு கொண்டு வந்தார். முதலாளியம், மூலதனம், குறித்தும் கம்யூனிசம் குறித்தும் தொழிலாளர்களுக்கு விளக்கி தொழிலாளர்களின் அறிவுத் தளத்தை விரிவுப்படுத்தினார்.

## பீகார் காங்கிரஸ் மாநாடு

1922 இல் பீகாரின் கயா நகரில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டில் தமிழகத்தின் சார்பாக கலந்து கொள்கிறார். அனைவரும் சகோதர சகோதரிகளே என்றும் இன்னும் வெவ்வேற பெயர்களில் போராட்டத்திற்கு வந்தவர்களை அழைத்து பேசி முடித்தனர்.

அடுத்து மேடைஏறிய சிங்கார வேலர் ‘தோழர்களே’ என்று முழக்கத்தை தொடங்கி நான் ஒரு கம்யூனிஸ்ட் உலக கம்யூனிஸ்ட் இயக்கத்தின் பிரதிநிதி என்று உரை நிகழ்த்தி இந்திய தொழிலாளர்களின் நலன் குறித்தும் இங்கே நடைபெற வேண்டிய புரட்சி குறித்தும் மிக எழுச்சியுடன் பேசி முடிக்கிறார் சிங்கார வேலர். அப்போது வடமாநிலத்தவர்கள் இவர் நம்மவர் நமக்கானவர் என்று போற்றினர்.

'இந்தியவில் இடதுசாரி சிந்தனையை எடுத்துச் செல்லவும் தொழிலாளர்கள் அரசமைக்கவும் காங்கிரஸில் ஊடுருவவும் சிங்காரவேலர்தான் மிகச் சிறந்த மனிதர் அவர் தலைமையேற்று முசாபர் அகமது, சௌகத் உஸ்மானி, குலாம் ஹீசைன் இன்னும் யாராக இருந்தாலும் இயங்க வேண்டுமென 1922 இல் சோவியத் ரகஷ்யாவில் வாழ்ந்து வந்த ஆ.ரோய் பம்பாயில் வாழ்ந்த ஞ.யு.டாங்கேக்கு கடிதம் எழுதுகிறார். அந்தக் கடிதமே சிங்கார வேலரின் தனித்தன்மை தலைப்பண்பைப் பறைசாற்றுவதை நாம் உணர முடியும்.

காந்தியின் தலைமையில் அமைந்த காங்கிரஸ் பேராயக் கட்சியைக் கண்டு நாம் அஞ்ச வேண்டியதில்லை. சிங்காரவேலர் தலைமையில் அமைந்துள்ள இந்துஸ்தான் லேபர் கிசான் கட்சி உண்மையில் சிறியதாக இருந்தாலும் உறுப்பினர் மிகுதியாக இல்லையென்றாலும் அரசு அஞ்சவேண்டியது அந்தக் கட்சிக்குத்தான்' என சிங்காரவேலர் தொடங்கிய கட்சியைப் பற்றி அந்நாளில் காவலர்கள் எழுதி வைத்த ரகசியக் குறிப்புகள் இவை. எனில் சிங்காரவேலரின் மீதான வெள்ளையர்களின் அச்சத்தை இதன்மூலமாக நாம் புரிந்துக் கொள்ள முடிகிறது.

## சிங்காரவேலரின் சமூகப்பணிகள்

பரிணாமவியலின் தந்தை எனப் போற்றப்படுகின்ற சார்லஸ் டார்வின், கார்ல்மார்க்ஸ், லெனின், ஏங்கல்ஸ், ஜன்ஸ்டீன், லாப்லஸ், புரூனோ போன்றோரைத் தமிழில் முதன்முதலில் அறிமுகம் செய்தவர் சிங்காரவேலர்.

தொழிலாளர் நலனுக்காக மே 1 அன்று 1923 இல் தொழிலாளர் விவசாயக் கட்சியை தொடங்கினார்.

இவர் சென்னை மாநகராட்சி உறுப்பினராக இருந்த போது பள்ளிகளில் மதிய உணவுத் திட்டத்தை வெற்றிகரமாக நடத்திக் காட்டினார். காமராசருக்கு முன்னோடி இவர்தான். தமிழ்மொழிக்காக பெரிதும் பாடுபட்டார். ஆட்சிமொழியாக்கும் கோரிக்கையை வலியுறுத்தினார்.

தமிழிலும் பிறமொழியில் இருந்து மொழிபெயர்ப்பிலும் பல நூல்களை எழுதியவர். இவர் எழுதிய சிந்தனைநூல்கள் மாஸ்கோ நகர் லெனின் நூலகத்தில் இடம் பெற்றுள்ளன. இவருடைய நூல்கள் தமிழக அரசால் நாட்டுடைமையாக்கப்பட்டுள்ளன. பெரியார் ஈ.வெ.ராமசாமியின் சுயமரியாதை இயக்கம் 1930களின் ஆரம்பத்தில் பொதுவுடைமையின் பக்கம் சாய சிங்காரவேலரின் சிந்தனைகளே அடிப்படையானது.

மட்டுமின்றி போராட்டக் களங்களிலும் முன்னத்தி ஏராக நின்று களம் காண்பவர், கண்டவர் சிங்காரவேலர்.

ஜாலியன் வாலாபாக் படுகொலை நிகழ்வைத் தொடர்ந்து ஏற்பட்ட பதற்ற நிலையைச் சமாளிக்கும் விதமாக இங்கிலாந்தின் வேல்ஸ் இளவரசர் இந்தியாவுக்கு வந்த போது அவரது வருகையை எதிர்த்து சென்னையில் பெரிய போராட்டம் ஒன்றை முன்னின்று நடத்தினார். அப்போராட்டம் ஆங்கிலேய அரசையே உலுக்கியது என்று அறிஞர் அண்ணா குறிப்பிட்டார்.

1928 இல் வரலாற்றுப் பெருமைமிகு ரயில்வே வேலை நிறுத்தத்தை நடத்திய தலைவர்கள் மீது தொடரப்பட்ட சதி வழக்கில் 10 ஆண்டுகள் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது. பின்னர் தண்டனை குறைக்கப்பட்டு ஆகஸ்ட் 1930 இல் விடுதலையானார். சிங்காரவேலருக்கு தமிழக அரசின் மரியாதை சிங்காரவேலரின் 150 ஆம் பிறந்தநாளை நினைவுகூறும் விதமாக தமிழக அரசு சிங்காரவேலரின் பிறந்தநாளை அரசு விழாவாக கொண்டாடியது. அதன்படி பிப்ரவரி 18, 2011 அன்று அனைத்து அரசு பள்ளிகளிலும் சிங்காரவேலர் பிறந்தநாள் விழா கொண்டாட ஆணை பிறப்பிக்கப்பட்டது. ஏறத்தாழ 30ற்கும் மேற்பட்ட நூல்களை அவர் எழுதியுள்ளார். அரசு நாட்டுடைமை ஆக்கியுள்ளது.

## சிங்காரவேலரின் இறுதிக்காலம்

1931ஆம் ஆண்டு உலக நாடுகளுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டார். அப்போது பெரியாரின் வேண்டுதலுக்கு இணங்க குடியரசில் தொடர்ந்து கட்டுரைகள் எழுதி வந்தார் சிங்காரவேலர். கம்யூனிஸ்ட் கட்சியின் அறிக்கையையும் தமிழில் மொழிபெயர்த்து குடியரசில் வெளியிட்டார். 1945 ஜூன் 24 ஆம் தேதி சென்னை அச்சுத் தொழிலாளர்கள் மாநாட்டில் கலந்துக் கொண்டு எழுச்சிமிகு உரையாற்றினார். அதுவே அவர் கலந்து கொண்ட கடைசி மாநாடு ஆகும்.

அப்போது அவர் ஆற்றிய உரையில் 'எனக்கு வயது 84 ஆயினும் தொழிலாளி வர்க்கத்திற்கு என் கடமையைச் செய்ய நான் இங்கே வந்துள்ளேன். உங்கள் மத்தியில் நான் இறந்தாலும் அதைவிட எனக்குக் கிடைக்கக்கூடிய பாக்கியம் வேறென்ன? என்றே இறுதி வரை கொள்கைப் பற்றுடன் உழைக்கும் மக்களின் பக்கம் நின்ற மாமனிதர் ஆவார்.

## மே தின நூற்றாண்டும் இன்றைய உலகமயமும்:

இந்த ஆண்டு 2023 மே தின நூற்றாண்டு இந்தியாவில் உழைப்பாளர்களால், தொழிற்சங்கங்களால், பாட்டாளிகளால் கொண்டாடப்படுகிறது எனில் முதல் வித்தாக விதை போட்டவர் தோழர் சிங்கார வேலர் தான். இன்று தற்போது தமிழ்நாடு அரசு 8 மணி நேர வேலை நேரத்தை நீக்கி 12 மணி நேரமாக அந்தந்த நிறுவனங்களின் வசதிக்கேற்ப கட்டமைத்துக் கொள்ளலாம்

என்ற மசோதாவை குரல் வாக்கெடுப்பு மூலம் பேரவையில் நிறைவேற்றியது. இந்த மசோதாவை நடைமுறைப்படுத்தக்கூடாது என்று மாநிலம் முழுதும் எழுந்த எதிர்ப்பால் செயல்படுத்தப்படாது என அரசு நிறுத்தி வைத்துள்ள நிலையில் மே தின நூற்றாண்டு வந்து சேர்ந்துள்ளது.

ஒருபுறம் தொழிலாளர் நலன், உழைப்பு, எதிர்காலம் குறித்த எவ்வித சிந்தனையுமற்ற தனியார்மய நவதாராளமய உலகமயக் கொள்கையை பின்பற்றும் கார்ப்பரேட் நிறுவனங்கள் பெருவாரியாக மக்களின் உழைப்பைச் சூறையாடி வளம் கொழிக்கும் 21 ஆம் நூற்றாண்டு தொழிலாளர்களின் இருண்ட கால ஆண்டென்றால் மிகையில்லை. ஒருபுறம் வேலையின்மை, பொருளாதார இழப்பு, பெருந்தொற்றால் சரிந்த நிதி நிலைமை, தனிமனித வாழ்வாதார இழப்பு, வாழிடம் பறிபோன நிலை, தொல்குடிகளின் நிலம் அபரிக்கப்பட்டு துரத்தியடிக்கப்படும் அதிகார வேட்டை, கனிவளக் கொள்ளை, இயற்கையின் வளங்களை வரையறையின்றி களவாடும் போக்கு இவற்றால் நாளக்கு நாள் நாம் வாழும் சமூகம் பெரும் பின்னடைவை சந்தித்து பாதித்து வருவதை காணமுடிகிறது.

இத்தகையச் சூழலில் அரசியல் பொருளாதார அறிவியல் விழிப்புணர்வுடன் கூடிய கல்வியாளர்களை, மாணவர்களை, தொழிலாளர்களை சமூக அமைப்புகள் இவற்றை எல்லாம் உருவாக்க வேண்டியது காலத்தின் கட்டாயமாகும். பொருளாதார அரசியல் நீக்கம் செய்யப்பட்ட தலைமுறைகளை உருவாக்கி வருவதும் உருவாக்குவதும் பெரும் சிதைவை பேராபத்தை உருவாக்கும்.

நவீன நவதாராளமயம் உழைக்கும் வர்க்கத்தினை குறைத்து நவீன தொழில்நுட்பங்கள் எனும் பெயரில் உழைப்புச் சுரண்டல் செய்து உரிமை கேட்கவும், பேசிடவும், குரல் எழுப்பவும் முடியாத கூடாத சமூகத்தை உற்பத்தி செய்கின்றன.

தொழிற்சங்கங்கள், தொழிலாளர் உரிமை, வேலை நேரம், ஊதிய உயர்வு, ஓய்வூதியம் வாழ்வாதாரம் என எதைப் பற்றியும் பேசவோ உரிமைப் போராட்டம் நிகழ்த்தவோ களத்திற்கு எவரும் வந்துவிடக்கூடாது, அவற்றைப் பற்றி சிந்திக்கவோ, வாசிக்கவோ கூடாத நிலையில் சமூகக் கட்டமைப்பை கல்வி நிலையங்கள் தொடங்கி காடுபோகும் வரை கார்ப்பரேட் நிறவன அதிகார மையங்கள் உருவாக்கி வைத்துள்ளன. இத்தகைய தனியார்மய, ஒப்பந்த மய உலகில் இருந்து நாம் நம் நாட்டையும், வளங்களையும் உழைக்கும் மக்களையும் மீட்க வேண்டுமெனில் சிந்தனைச் சிற்பி வழியில் உறுதியுடன் களமாட வேண்டும், களமாடுவோம்.

---



## ஏப்ரல் மாதம் வண்ணம் தீட்டி பரிசு பெறும் மொட்டுக்கள்

1. A. Rhema – 7th std
   Kancheepuram
2. A. Rejina
   5th std
   Kancheepuram
3. Ron Evanston,
   Kancheepuram
   Chennai
4. Haadwin Paul.E – 6th std.
   Vepery.
5. Nino Jovia
   Kancheepuram
6. Bino Joshna
   Kancheepuram

புதிய இதயம்
திங்கள் இதழ்

# தமிழ் அறம்

தொடர்ச்சி,



மரபுப்பாவலர். அகன், கீரனூர், புதுக்கோட்டை (மாவட்டம்).

கி.பி. 2001 இல், இந்திய நடுவன் அரசின் எரிவாயு நிறுவனம், குஜராத்துக் கடற்பகுதியின் ஆழ்கடலில் ஆய்வுப் பணிகளை நடத்தியபோது, 'ஒரு பொருளைக் கண்டெடுத்தார். அந்நிறுவனத்தின் பொறியாளரான ஒரு தமிழர்! அப்பொருளைத் தில்லியுள்ள சகானி தொல்பொருள் ஆய்வகத்தில் கொடுத்து, அப்பொருள் யாது…? அதன் காலம் எது…? என்று ஆய்ந்து கணித்துக் கூற வேண்டினார்!

ஆதனை ஆய்ந்து கணித்த நிறுவனம், 'அப்பொருள் உடைந்துபோன ஒரு மரக்கலத்தின் ஒரு பகுதி; அதன் காலம் கி.மு. 7500 கிற்கு முன்' என்று அறிவித்தது!

இதனைக்குறித்து, அப்போதைய அமைச்சர் திரு. முரளிமனோகர் சோசி-யிடம், சிந்தாற்று வெளிநகர நாகரிகம் தமிழர் நாகரிகமா? ஆரிய அவர் திரும்பத் திரும்ப அது இந்திய நாகரிகம் என்றே நாடே உலகில் இருக்கவில்லையே…! இருந்ததெல்லாம், குமரித்தமிழ்நாட்டுடன் இணைந்திருந்த நாவலம்தேயம்-தானே? அதனால், அது தமிழர் நம் நாகரிகமே என்று உறுதிப்பட்டது! (தி நியு இந்தியன் எக்சுபிரசு நாளிதழ், சென்னை- நாள் 17-01-2022)

உலகின் ஆழ்கடல் ஆய்வாளர்கள், வரலாறு எழுதியோர் எல்லோரும், மெசபடோமியாவின் (இன்றைய ஈராக் நாட்டின் ஒரு பகுதி) சுமேரிய நாகரிகமே உலகின் பழைமையான, கி.மு.5000 ஐச் சேர்ந்த நாகரிகம்' என்றே அன்று வரை கூறிவந்தனர்! அது பொய் என்றானது!

இந்திய ஒன்றியத்துள் 'நெருக்கடி நிலை' யைத் திணித்துக் கொடுங்கோலோச்சிய, திருமதி. இந்திரா காந்தி, 'சிந்து வெளிநாகரிகம் ஆரியர்ள் என்போருடையது என்று, பெரும் புனைவுப் புளுகை வரலாறாக விரித்துப் பொறிக்கச் செய்த செப்புப்பட்டயங்களை ஒரு பேழைக்குள் வைத்துக், 'காலப்பெட்டகம்' TIME CAPSULE – என்று கூறி மண்ணுள் புதைத்தார் - அவரின் ஆட்சிக்காலத்தில்!

ஆனால், மொரார்சிதேசாய் அவர்கள் விடுத்த வலிவான வினாக்களால், புதைத்ததைத் தோண்டி எடுத்துப் பார்த்த போது, புளுகுகள் அம்பலமாகின! உலகே அதைக்கண்டு நகைத்தது!

பெரோசுக்கான் - என்னும் பார்சி இசுலாமியரை மணந்த இந்திரா பிரிதருசினி, தனது துணைவரின்

பெயரின் கடைசிச்சொல்லான ‘கான்’ – என்பதைத் தன் பெயருடன் சேர்த்து இந்திராகான் - என்றானார்! ஆனால் மிகக் கமுக்கமாக, இந்திரா காண்டி என்று மாற்றி, இந்திராகாந்தி எனத் திரித்துக் கொண்ட பின்னரே அரசியலில் நுழைந்தார். ஏதோ, ‘மகாத்மா காந்தியின் வழிமுறை உறவு என, உலகை ஏமாற்றினார்! அவரின் மகன்கள், மருமக்கள், பேரன், பேத்தியர் - எல்லாம் தலைமுறை ஏய்ப்புகளைத் தொடர்கின்றனரே!

தமிழர் நம் தொன்மையான உண்மை வரலாற்றை மறைக்கத் துடித்தவரின் நேர்மை உலகின்முன் பகடிப் பொருளானதே!

**‘உண்மையும், எண்ணெய்யும் ஒருநாள்
எப்படியும் மேலெழும்பியே தீரும்’**

என்ற நம் தமிழ் அரணம் தேவநேயப் பாவானர் அவர்களின் முன்னறிவிப்பு இன்று மெய்யானது!
நம் தமிழர் நாகரிகத்தின் தொன்மைக்குச் சான்று ஆவணமாகக் காவிரிப்பூம்பட்டினமாகிய பூம்புகார் நகரநாகரிகம் கி.மு. 15,000 கிற்கும் பழைமையானது எனத் தற்போது நிறுவப்பட்டுள்ளது! இன்னும் விரிவாகக் குமரிக்கடல் ஆய்வுகள் செய்யப்பட்டால், மேலும் காலத்தின் முன்மை வெளிப்படுமே!

## பனிஉருகுப் பெருநேர்ச்சி:

கி.மு. 15000 முதல் 7000 வரை, தொடர்ந்து 8000 ஆண்டுக்காலம், வட-தென் முனைகளின் பனிப் பாறைகள் உருகியதன் விளைவாக 120 மீட்டர் (400 அடி) அளவிற்குக் கடலின் நீர்மட்டம் படிப்படியாக உயர்ந்தது என்பதை முன் பகுதிகளில் விளக்கியிருக்கிறோம்.

இப்பெரு நேர்ச்சியால், முதலில் கடலோரத் துறைமுகாய்களும், துறைமுகநகர்களும், பிற குடியிருப்பு நகர்களும், குமரிக்கண்டத்தின் தாழ்வான நிலப்பகுதிகளும் கடலுள் மூழ்கத் தொடங்கின!

கிழக்கே ஆத்திரேலியாவுக்கும், மேற்கே ஆப்பிரிக்காவுக்கும் இடைப்பட்ட குமரிக்கண்டப் பகுதித் தாழ்வான நிலங்கள் யாவும் கடலுள் மூழ்கின! இடையே குமரிக்கடல் அமைந்து ஆத்திரேலியா, ஆப்பிரிக்கா இரண்டையும் பிரித்துத் தனித்தனிக் கண்டங்களாக மாற்றியது! தாழ்வான நிலப் பகுதிகளிலிருந்த மலைகளின் முகட்டுப் பகுதிகளும், மேடான நிலப்பகுதிகளும், தீவுகளாகத் தோற்றங்கொண்டன!

குமரித் தமிழ்நாட்டின் ப∴றுளி ஆறு வரை இருந்த நிலப்பரப்பும், ப∴றுளி ஆறும், பலமலைத் தொடர்களைக் கொண்ட குமரி மலைத்தொடரும், ப∴றுளி ஆற்றங்கரையில் அமைந்திருந்த பாண்டியவேந்தரின் தலைநகரும், தமிழ்ச்சங்கத் திருநகரும், விண்ணாய்வுக் கூடம் முதலானவை செயல்பட்ட நகருமான மதுரை முதுநகர் கடலுள் மூழ்கி அழிய நேரிட்டது! அச்சமயத்தில் ஏற்பட்ட இறுதிமாற்றமாக இமயப் பனிமலையின் கீழிருந்த பேரேரியில் மடிப்பு மலைகள் தோன்றிப் பனிமலையுடன் இணைந்தது! பனி மலை வரை நிலப்பரப்பு எழுந்தது! சிந்து, கங்கை முதலான பேராறுகள் பனிமலையில் தோன்றிப் பாய்ந்தன!

கடல்நீர் மட்டம் உயர உயர, அங்கிருந்த மக்கள் தப்பி, வடக்குநோக்கிக் குமரிப் பேராற்றைக் கடந்து வட நாவலந்தேயத்திற்கும், ஆத்திரேலியா, சீனா முதலான நிலப்பகுதிகளுக்கும், மேற்கே மெசபத்தோமியா, எகிப்து முதலான நிலப் பரப்புகளிலும் பரவிக் குடியேறினர்!

ஆத்திரேலியா, சீனா, ஆப்பிரிக்கா, மெசபத்தோமியா, எகிப்து முதலான பெயர்கள் எல்லாம் கி.மு.5000 ஆண்டுகளுக்குப் பின்னர் தான் ஏற்பட்டன!

## மயிலாடுதுறை:

காவிரிப் பூம்பட்டினம் எனும் காவிரி ஆறு கடலுள் புகும் கழிமுகத்தில் நிறுவப்பட்ட நகர் பெரிய துறை முகமாகத் திகழ்ந்தது! பூம்புகார் எனும் போற்றப்படுவதும் அந்நகரே!

கி.மு. 15000 ஆண்டுகளுக்கு முன்னர் நகரம் அழிந்தபோது, காவிரி ஆற்றின் நீர் வழித்தடமும் மாறியது. அதனால், காவிரிஆறு கடலுள் புகுந்த இடத்திலேயே மீண்டும் பூம்புகார் துறைமுகம் நிறுவப்பட்டது. கி.மு. 12000 இல்!

அதன்பின், காவிரி கடலோடு புகும் புதிய பகுதியில் பூம்புகார் துறைமுகம் 3 ஆவது, முறையாக நிறுவப்பட்டது! அதுவும் கடலுள் மூழ்கியபோது, கடல் நீர் இன்றைய மயிலாடுதுறை வரை மேலெழுந்திருக்க அவ்விடத்தில் காவிரி ஆறு கடலோடு கலந்தது! எனவே, மீண்டும் 4ஆவது முறையாகப் பூம்புகார் துறைமுக நகர் நிறுவப்பட்டது!

துறைமுகத்திற்கு அருகில் பல வகையான மயில்கள் வளர்க்கப்பட்டுக் காவல் செய்யப்பட்டது. மயில்கள், மயில் தோகைகள், மிளகு, சந்தனம், தேக்கு, முத்து, எ.்.குப் பாளங்கள், உண்பொருட்கள் முதலானவை கடல்வழி ஏற்றுமதி செய்யப்பட்டன!

பின்னர், கி.மு.6000 இல் கடல் பின் வாங்கி இன்றைய சீர்காழி என்னும் கழுமத்தில் கடற்கரை அமைந்தும், அவ்விடத்தில் காவிரி ஆறு கடலுள் புகுந்தும் அமைந்ததால் 5 ஆவது முறையாகப் பூம்புகார் அவ்விடத்தில் நிறுவப்பட்டது!

பூம்புகார்-4 இன் அருகே அமைக்கப்பட்ட மயில்களின் காப்புக்காடே இன்று மயில் ஆடுதுறை எனப் பெயருற்றது! பின்னர் அங்கு குடியிருப்புகள் அமைக்கப்பட்டு இன்று நகராக விளங்குகின்றது!

**‘பீலிபெய் சாகாடும் அச்சுஇறும்ளூ அப்பண்டம்
சால மிகுத்துப் பெயின்’**

– என்றும், வலிஅறிதல் அதிகாரத்திலுள்ள 475 ஆம் திருக்குறள் பாடலில், ‘எடைகுறைந்த மயில்தோகையான பீலிமை அளவிற்கு மேல் ஏற்றினாலும், சகடு என்னும் காளைகள் பூட்டப்பட்ட வண்டியின் அச்சு முறிந்து விடும்’ – எனத் திருவள்ளுவர் அறிவுறுத்துகிறார்! சகடுகளில் மயில்தோகைகள் ஏற்றப்பட்டுத் துறைமுகங்களுக்குச் செல்லும் காட்சிகளைக் கண்டே, வலிமையறிதல் அறிவுரைக்கு மயில்தோகை ஏற்றிய சகடுவை உவமையாக்கி உள்ளார்!

‘பீலிபெய் சாகாடு’ – என்று, சகடு என்பதைச் சாகாடு- எனக் கொண்டதற்குக் காரணம், யாப்பு இலக்கணப் படி இரு சீர்களைத் தளைத்திடும் போது, வெண்பாவுக்குரிய, விளம் - நேர் என்று, இயற்சீர் வெண்களை அமைவதற்காகவே தான் யாப்பு இலக்கணம் கற்றால் இதனை அறியலாம்!

தொடரும்...

## விவிலியம் அறிவோம்
## சரியான விடை எழுதியோர்

# ஏப்ரல் மாதம்

1. A. Maria Benisha,
   Tharuvaikulam,
   Thoothukudi.

2. M. Josephine Jeeva,
   Kasimedu,
   Chennai -13.

3. Mrs. Stella Jayaraj,
   Karunya Nagar,
   Sivagangai Dt.

4. P. Saroja,
   Mudichur,
   Chennai - 48.

5. J. Micheal Nicholos Ananth,
   Tharuvaikulam,
   Thoothukudi.



# வெயிலை சமாளிக்கும் வழிமுறை

## வாட்டியெடுக்கும் வெயில்:

### சமாளிக்கும் வழிமுறைகள்

கோடை வெயிலால் குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை, பல்வேறு உடல்நலப் பிரச்சனைகளை எதிர்கொள்ள நேரிடுகிறது. அதிகரிக்கும் வெப்பம், சருமப் பிரச்சனைகள் முதல் நீர்க்கடுப்பு வரை ஏற்படுத்தும். கோடையில் ஏற்படும் முக்கிய உடல்நலப் பிரச்சனைகளையும், அவற்றை சமாளிக்கும் வழிகளையும் இங்கு காணலாம்.

### பூஞ்சை தொற்று

உடலில், ஈரமுள்ள பகுதிகளில் பூஞ்சைக் கிருமிகள் எளிதில் தொற்றிக்கொள்ளும். குறிப்பாக, வியர்க்குருவில் இத்தொற்றும் சேர்ந்துகொண்டால், அரிப்புடன் கூடிய படை, தேமல் தோன்றும், படையை குணப்படுத்தும் களிம்பு அல்லது பவுடரைத் தடவிவர இது குணமாகும். உள்ளாடைகளைச் சுத்தமாக வைத்துக்கொண்டால் பூஞ்சை படையை தடுக்கலாம்.

### வியர்க்குரு

கோடை வெயிலால் நமது உடல் வெப்பநிலையும் அதிகரிக்கிறது. இதனால், உடலைக் குளிர்விக்க அதிக அளவில் வியர்வை சுரக்கிறது. இந்த நிலையில் உடலைச் சுத்தமாகப் பராமரிக்காவிட்டால், தோலில் உள்ள வியர்வைச் சுரப்பிகளில் அழுக்கு சேர்ந்து அடைத்துக்கொள்ளும். இதனால், வியர்க்குரு வரும். வெயில் காலத்தில் தினமும் இருவேளை குளித்தால் வியர்க்குருவை தவிர்க்கலாம். வியர்க்குருவின் மீது, காலமின் லோஷனைப் பூசினால் அரிப்பு குறையும். வியர்க்குரு பவுடர்களையும் பயன்படுத்தலாம்.

### வேனல் கட்டிகள்

தோலின் மூலம் வெளியேற வேண்டிய உப்பு, யூரியா போன்றவை சரியாக வெளியேற முடியாமல் வியர்க்குருவில் அழுக்குபோல் தங்கிவிடும். அப்போது அங்கு பாக்டீரியா தொற்றிக்கொள்ள, அந்த இடம் வீங்கிப் புண்ணாகிவிடும். இதுவே வேனல் கட்டி. இதற்கு தீர்வாக ஆண்டிபயாடிக் மருந்துகள், வலி நிவாரணிகள், வெளிப்பூச்சுக் களிம்புகள் ஆகியவற்றைப் பயன்படுத்த வேண்டும். வெயிலில் வெளியில் செல்வதையும் தவிர்க்கலாம்.

### நீர்க்கடுப்பு

கோடையில் சிறுநீர்க்கடுப்பு அதிகத் தொல்லை தரும். அளவுக்கு மீறி வியர்வை வெளியேறுதல் மற்றும் தேவையான அளவு தண்ணீர் குடிக்காதது இதற்கு முக்கியக் காரணம் உட்கொள்ளும் தண்ணீரின் அளவு குறையும் போது சிறுநீரின் மூலம் வெளியேற வேண்டிய உப்புகள் கடினமாகி, சிறுநீர்ப் பாதையில் படிகங்களாகப் படிந்துவிடும். இதன் விளைவுதான் நீர்க்கடுப்பு. நிறையத் தண்ணீர் குடித்தால் இந்தப் பிரச்சனை சரியாகிவிடும்.

### தொற்றுநோய்கள்

இந்தக் கோடையில் சில நோய்க்கிருமிகள் அதிக ஆற்றலுடன் செயல்படும். இந்த காலகட்டத்தில் தான் சின்னமை எளிதில் தொற்றும். உடம்பில் நீர்ச்சத்துக் குறைந்தாலும் சின்னம்மை ஏற்படும். வெயில் காலத்தில் சமைத்த உணவு வகைகள் விரைவில் கெட்டுவிடும். அவற்றில் நோய்க்கிருமிகள் அபரிமிதமாகப் பெருகும். இந்த உணவுகளை உண்பதால் பலருக்கு வாந்தி, வயிற்றுப்போக்கு, சீதபேதி, காலரா, டைபாய்டு, மஞ்சள் காமாலை போன்ற நோய்கள் வரும். ஆகையால், வெயில் காலத்தில் சமைத்த உணவுகளை உடனுக்குடன் பயன்படுத்திவிடுவது நல்லது. உணவு மீது ஈக்கள் மொய்க்காமல் மூடிப் பாதுகாக்க வேண்டியதும் முக்கியம்.

### வெப்பத் தளர்ச்சி

வெயிலின் ஆதிக்கம் அதிகரிக்கும்போது, உடலின் வெப்பம் 106 டிகிரி ஃபாரன்ஹீட்டுக்கு மேல் தாண்டிவிடும். அப்போது உடல் தளர்ச்சி அடையும்; களைப்பு உண்டாகும். தண்ணீர்த் தாகம் அதிகமாக இருக்கும். தலைவலி, வாந்தி, தலைச்சுற்றல், மயக்கம் போன்ற அறிகுறிகள் தோன்றும். அளவுக்கு மீறிய வெப்பத்தின் காரணமாக, உடலின் உப்புகள் வெளியேறிவிடுவதால் இந்தத் தளர்ச்சி ஏற்படுகிறது.

### வெயிலில் அலையாதீர்

கோடையில் 2 மணி நேரத்துக்கு மேல் தொடர்ந்து வெயிலில் இருப்பதைத் தவிர்க்க வேண்டும். பகல் 12 மணியிலிருந்து மாலை 4 மணி வரை வெளியில் செல்லாமல் இருப்பது நல்லது. அவசியம்

செல்ல வேண்டுமென்றால், குடையை எடுத்துச் செல்லுங்கள். முடிந்தவரை நிழலில் செல்வது நல்லது. முதியவர்கள், குழந்தைகள், உடல்நலம் குறைந்தோர் வெயிலில் அதிக நேரம் பயணிக்க வேண்டியிருந்தால், கண்களுக்கு 'சன் கிளாஸ்' அணிந்து கொள்ளலாம்.

### வெப்பமயக்கம்:

நீண்ட நேரம் வெயிலில் வேலை செய்கிறவர்கள் மற்றும் சாலையில் நடந்து செல்கிறவர்கள், திடீரென மயக்கம் அடைவது, 'வெப்ப மயக்கத்தின் விளைவாகும். இதற்குக் காரணம், வெயிலின் உக்கிரத்தினால் தோலிலுள்ள ரத்தக்குழாய்கள் அதிகமாக விரிவடைந்து, இடுப்புக்குக் கீழ் இரத்தம் தேங்குவதற்கு வழி வகுக்கிறது. இதனால், இதயத்துக்கு செல்லும் ரத்தம் குறைந்து, ரத்த அழுத்தம் கீழிறங்குகிறது; மூளைக்கும் போதுமான ரத்தம் கிடைப்பதில்லை. இவற்றின் விளைவாக மயக்கம் வருகிறது. மயக்கம் ஏற்பட்டவரை குளிர்ச்சியான இடத்துக்குக் கொண்டு அல்லது மின்விசிறிக்குக் கீழே படுக்க வைத்து, ஆடைகளைத் தளர்த்தி, காற்று உடல் முழுவதும் படும்படி செய்யுங்கள். தலையணை வேண்டாம். பாதங்களை உயரமாகத் தூக்கி வைக்கவும். தண்ணீரில் நனைத்த துணியால், உடல் முழுவதும் ஒற்றியெடுத்துத் துடைக்கவும். மேலும், அவருக்குக் குளுக்கோஸ் நீர் கொடுத்து, உடனடியாக அவரை மருத்துவரிடம் அழைத்துச் செல்லுங்கள்.

### தவறாமல் தண்ணீர் குடியுங்கள்

சென்னை போன்ற நகரங்களில் காற்றின் ஈரப்பதம் மிக அதிகமாக உள்ளது. இதனால் தொடர்ந்து வியர்வை சுரப்பதால் சோடியம், பொட்டாசியம் உள்ளிட்ட நுண்சத்துகள் தொடர்ந்து வெளியேறி, அதிக நீரிழப்பு ஏற்படுகியது. இதனால், உடல் தளர்ச்சி அடைகிறது; களைப்பு உண்டாகிறது. இந்த நிலைமையைத் தவிர்க்க, மணிக்கொரு முறை தண்ணீர் அருந்த வேண்டும். ஏசி அறையில் இருந்தால்கூட, தாகம் எடுக்கவில்லை என்றாலும், கோடைக் காலத்தில் தினமும் மூன்றிலிருந்து ஐந்து லிட்டர் வரை தண்ணீர் குடிப்பது அவசியம். கண்டிப்பாக கைப்பையில் எப்போதும் பாட்டிலில் தண்ணீர் வைத்துக் கொள்ளுங்கள்.

### இருவேளை குளியல்

வெயில் காலத்தில் சூரிய உதயத்துக்கு முன் கண்விழிப்பது உடலுக்குக் குளிர்ச்சியை தரும். இந்தக் காலத்தில் காலை, மாலை என இரண்டு வேளைகளும் குளிப்பது சிறந்தது. உடலில் வியர்வை அதிகம் கசிவதால் உண்டாகும் அசுத்தத்தைப் போக்கவும், உடல் வெப்பத்தைக் குறைக்கவும், நீராடுவது பயன்தரும். வாரம் இரண்டு முறை நல்லெண்ணெய் குளியல் செய்வதால், வெயில் கால நோய்களிலிருந்து தப்பிக்கலாம். கற்றாடைக் கூழ் அல்லது எலுமிச்சையை தலையில் தேய்த்துக் குளிப்பதால், உடலுக்குத் தேவையான குளிர்ச்சியை அதிகரித்துக்கொள்ளலாம்.

### குளிர்பானங்கள் வேண்டாம்

